

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், 2015-16-ம் கல்வி ஆண்டில் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் மாநில அளவில் 3-ம் இடம் பெற்ற கன்னியாகுமரி மாவட்ட மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் தலா ரூ.15,000/-க்கான காசோலைகளை இன்று (06.03.2017) வழங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ. இளங்கோ, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி. எஸ்.பாலா (பொ) ஆகியோர் உடனுள்ளனர்.

செ.வெ.எண்: 164/2017 நாள்: 06.03.2017

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள்,
2015-16-ம் கல்வி ஆண்டில் பத்தாம் வகுப்பில்,
மாநில அளவில் 3-ம் இடம் பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு
பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் காசோலைகளை
பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில்
இன்று வழங்கினார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், பொது மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக லூயி பிரெயிலி கூட்டரங்கில் இன்று (06.03.2017) நடைபெற்றது.

திங்கட்கிழமை தோறும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெறும் பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு குறைகள் தீர்க்க நடவடிக்கை மேற்கொள்வதுடன், நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், 2015-16-ம் கல்வி ஆண்டில் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில், மாநில அளவில் 497/500 மதிப்பெண்கள் பெற்று, 3-ம் இடம் பெற்ற கன்னியாகுமரி மாவட்ட மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டுச்சான்றிதழ்கள் மற்றும் தலா ரூ. 15 ஆயிரத்திற்கான காசோலைகளை, மாவட்ட ஆட்சியர் அலுவலக லூயி பிரெயிலி கூட்டரங்கில் இன்று (06.03.2017) வழங்கினார்.

கன்னியாகுமரி மாவட்டம், நெய்யூர், எல்.எம்.எஸ். மகளிர் மேல்நிலைப்பள்ளியை சார்ந்த ஆர். ஆசிதா தேவஷைசி, நாகர்கோவில் என்.ஜி.ஓ. காலனி, இவான்ஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியை சார்ந்த ஏ. ஆட்லின், தக்கலை, அமலா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியை சார்ந்த எஸ்.ஸ்லின் பெரில், ஜெ. ஜூலி ட்ரைபோசா, ஆர்.ஜெ. பூஜா, குளுமைக்காடு ஆட்லின் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியை சார்ந்த எம்.ஏ. பௌஸ்மி, எஸ்.ஜி. கார்த்திக், நாகர்கோவில் பொன்ஜெஸ்லி பப்ளிக் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியை சார்ந்த எம்.பிரியதர்ஷினி, குலசேகரம் ஸ்ரீராமகிருஷ்ணா பால வித்யா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியை சார்ந்த கே. ரிஷ்மிகா, ஆலங்கோடு மதர்தெரசா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியை சார்ந்த எஸ்.சிவகுருநாதன், நாகர்கோவில் ஆல்பா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியை சார்ந்த வி.எஸ். வினிதா ஆகிய 11 மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டுச்சான்றிதழ்கள் மற்றும் தலா ரூ. 15 ஆயிரத்திற்கான காசோலைகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலக லூயி பிரெயிலி கூட்டரங்கில் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் இன்று (06.03.2017) வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ. இளங்கோ, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு. எஸ்.பாலா (பொ), மாவட்ட முதன்மை கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் திரு. ராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.